**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 682/2024**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 09.10.2025.**

| | |
|---|---|
| **Name : செந்தாமரை** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வெள்ளை பிள்ளையார் கோவிலில் குடியிருந்து வீட்டிலிருந்து வருகிறேன். கடந்த 22.05.2024 ம் தேதியன்று காலை 07.30 மணி சுமாருக்கு மேட்டூர் செல்வதற்காக நான் ராசிபுரம் டூ மேட்டூர் செல்லும் தங்கம் பேருந்தில் ஏறி ஓட்டுநர் இருக்கைக்கு பின்னால் 3 வது சீட்டில் உட்கார்ந்து பயணம் செய்தேன். சுமாராக பேருந்தில் 30 பேர் பயணம் செய்தார்கள். பேருந்து ஜலகண்டாபுரம் பேருந்து நிலையத்திற்கு காலை 08.45 மணிக்கு உள்ளே நுழைந்தது.

2) பேருந்து பிரேக் பிடிக்காத காரணத்தால் பேருந்து நிலையத்திலிருந்த தூண் மீது மோதி நின்றது. பிரேக் பிடிக்கவில்லை என்று ஓட்டுநர் சொன்னார். அவ்வாறு தூண் மீது மோதும் போது அங்கு நின்றிருந்த நபர் மீது மோதியது. பேருந்தில் இருந்த மூன்று நபர்களுக்கு காயம் ஏற்பட்டு ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்தார்கள். எனக்கு விபத்தின் காரணமாக மூக்கில் காயம் ஏற்பட்டது. மேல் சிகிச்சைக்காக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்று ஒரு நாள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். பேருந்து ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. அதனால் என்னால்

அடையாளம் சொல்ல முடியாது.  இந்த விபத்திற்கு ஓட்டுநர் தான் காரணம் ஆவார். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3. போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் அன்றையதினம் விபத்து நடந்த இடத்தில் வைத்து போலீசார் விசாரித்தார்கள். போலீசார் விசாரிக்கும் போது பேருந்து ஓட்டுநர் பிரேக் பிடிக்காத காரணத்தால் தான் விபத்து ஏற்பட்டதாக தெரிந்து கொண்டதாக சொன்னேனா என்றால் போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்று சாட்சி சொன்னார். பேருந்தின் பதிவெண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் போலீசார் விசாரிக்கும் போது எதிரியை தெரியும் என்றும், பதிவெண் தெரியும் என்றும் சொன்னேனா என்றால் இல்லை.

4. மருத்துவமனையில் விசாரித்த பிறகு என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். பேருந்து பிரேக் பிடிக்காத காரணத்தால் தான் விபத்து ஏற்பட்டது என்று நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 682/2024**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 09.10.2025.**

| | |
|---|---|
| **Name : பவித்ரா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஆட்டையாம்பட்டியில் குடியிருந்து வீட்டி தறி ஓட்டி வருகிறேன். கடந்த 2024 ம் வருடம் ஒரு நாள் காலை 08.00 மணி சுமாருக்கு மேட்டூர் செல்வதற்காக நான் ஆட்டையாமபட்டியில் ஏறினேன். அந்த பேருந்து ராசிபுரம் டூ மேட்டூர் செல்லும் தங்கம் பேருந்தில் ஏறி ஓட்டுநர் இருக்கைக்கு பின்னால் 3 வது சீட்டில் உட்கார்ந்து பயணம் செய்தேன். அ.சா.3 அருகில் அமர்ந்து நான் பயணம் செய்தேன். சுமாராக பேருந்தில் 40 பேர் பயணம் செய்தார்கள். பேருந்து ஜலகண்டாபுரம் பேருந்து நிலையத்திற்கு காலை 9.30 மணிக்கு உள்ளே நுழைந்தது.

2) உள்ளே நுழையும் போது டமார் என சத்தம் கேட்டது. குழந்தை என் மடியில் இருந்ததால் குழந்தையை பிடிக்கும் போது என் மூக்கு சீட்டில் பட்டு காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரி தான் பேருந்து ஓட்டினார் என சாட்சி அடையாளம் காட்டினார். இந்த விபத்து எதனால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியவில்லை. சம்பவத்தை நான் நேரில் பார்த்த பின்னிட்டு பேருந்திலிருந்து இறங்கி சென்று பார்த்த போது ஒரு நபருக்கு காயம் ஏற்பட்டு தலையில் ரத்தம் வெளியேறிக் கொண்டிருந்தது. மற்றொரு நபர் காயம் ஏற்பட்டு இருந்தார். ஆம்புலன்ஸ் மூலமாக அவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். எனக்கு

மூக்கில் ரத்தம் வந்ததால் என் கணவர் வந்து என்னை தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். பின்னிட்டு ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சை பெற்று பின்னர் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3. போலீசார் என்னிடம் விசாரணை செய்தார்களா என்றால் போன் மூலமாக விசாரணை செய்தார்கள். விபத்து நடந்த எத்தனை நாட்களுக்கு பின்னர் போன் மூலமாக விசாரித்தார்கள் என்றால் விபத்து நடந்து ஒரு வாரத்திற்குள் விசாரணை செய்தார்கள். பேருந்தின் பதிவெண் விசாரணையின் போது சொன்னேனா என்றால் பேருந்தின் பெயரை சொன்னேன். பதிவெண் தெரியாததால் நான் சொல்லவில்லை.

4. விபத்து நடந்தது பேருந்து பிரேக் பிடிக்காததால் நடந்ததாக அ.சா.3 சொல்லியுள்ள நிலையில் உங்களுக்கு இது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. விபத்தில் எத்தனை பேருக்கு காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. பேருந்து பிரேக் பிடிக்காததால் விபத்து ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 682/2024**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 09.10.2025.**

| | |
|---|---|
| **Name : தேன்மொழி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஆட்டையாம்பட்டியில் குடியிருந்து வீட்டிலிருந்து வருகிறேன். கடந்த 2024 ம் வருடம் ஒரு நாள் காலை 08.00 மணி சுமாருக்கு மேட்டூர் செல்வதற்காக நான் ஆட்டையாமபட்டியில் ஏறினேன். நான் மற்றும் அ.சா.4 ஏறினோம். அந்த பேருந்து ராசிபுரம் டூ மேட்டூர் செல்லும் தங்கம் பேருந்தில் ஏறி ஓட்டுநர் இருக்கைக்கு பின்னால் 3 வது சீட்டில் உட்கார்ந்து பயணம் செய்தேன். அ.சா.3 அருகில் அமர்ந்து நான் பயணம் செய்தேன். சுமாராக பேருந்தில் 40 பேர் பயணம் செய்தார்கள். பேருந்து ஜலகண்டாபுரம் பேருந்து நிலையத்திற்கு காலை 10.30 மணிக்கு உள்ளே நுழைந்தது.

2) உள்ளே நுழையும் போது பேருந்து வளைந்து செல்ல வேண்டிய நிலையில் நேராக கொண்டு சென்று பேருந்து நிலையத்திற்குள் விட்டார். இதன் காரணமாக பேருந்தில் இருந்த 5 நபர்களுக்கு காயம் ஏற்பட்டது. வெளியே நின்று கொண்டிருந்த நபர் இறந்துவிட்டதாகவும் எனக்கு பல்லில் அடிப்பட்டது. ஆஜர் எதிரி தான் ஓட்டுநர் என்று சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். நான் தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். பின்னிட்டு ஜலகண்டாபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சை பெற்று பின்னர் அங்கிருந்து

மேல் சிகிச்சைக்காக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3. விபத்து நடந்த எத்தனை நாட்களுக்கு பின்னர் போன் மூலமாக விசாரித்தார்கள் என்றால் விசாரிக்கவில்லை. என் கணவரிடம் கேட்டார்கள். போலீசார் நேரடியாக விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். பிரேக் பிடிக்காததால் பேருந்து விபத்து ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை.

4. விபத்து நடந்தது பேருந்து பிரேக் பிடிக்காததால் நடந்ததாக அ.சா.3 சொல்லியுள்ள நிலையில் உங்களுக்கு இது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. பேருந்து பிரேக் பிடிக்காததால் விபத்து ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**